ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

31 JUL 19

மரணவிளக்கம்

மனதைத் துலக்கும்

இஃது

வள்ளல் நகரமாகிய பள்ளப்பட்டி
வேலங்குடி ஹாஜியார் நூறுமுகமது சாஹிபு
மக்புருல் மருஹூமு இவர்கள் பிள்ளை
இராயவேலூர் ஆ. மௌலான மௌலலிவாயீன்
முஹம்மது இபுருஹீம் சாயபு அவர்களால்
இயற்றப்பெற்று

சென்னை - இட்டா
பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,
சக்கரவர்த்தி பிரஸ்.

நெ. 189, தங்கசாலைவீதி - சென்னை.

[illegible]லை] 1946 [அணா 0-5-0

QT:21
N46

...மா னிற்றஹீம்.

... விளக்கம்
ம... ளைத்துலக்கும்.

31 JUL 1946

காப்பு

அழிவிலா வல்லவனே யடங்கலை யமைத்தவனே
எல்லா மழித்தபின் எழுப்பியதல் செய்பவனே
எங்காளு மெங்கள்பிழை எல்லா மழிப்பவனே
மரணவிளக் கம்பாட மன்னவாநீ காப்புதானே.

இது முனாஜாத்து மத்னவி இராகம்.

அழிவில்லாத காயிமான ஹையனே
அழித்து எழுப்பி கேள்விகட்கு மெய்யனே
ஸல்லி ஸல்லிம் குல்லயௌமின் றப்பனு
ஸையதுஸ்ஸா தாத்துபேரில் ஹஸ்பனு
இன்னமவரின் வீட்டுஜனங்கள் பேரிலும்
இன்னமஸ்காபான பெரியோர்பேரிலும்
இன்னமவரைத் தொடர்ந்தவர்கள்பேரிலும்
இன்னமற்று மன்பியாக்கள்பேரிலும்
சொல்லிசலவாத்தும் சலாமுமுன்னிடம்
சொல்லிகெஞ்சி கேட்கிறேம்செய்சம்மதம்
மூமினீங்கள் முஸ்லிமீங்கள் பாவங்கள்
முழுதுமழித்துசெய் சதாநீ லாபங்கள்
மௌத்துஹாலிலோ தவை தௌகீதைநீ
மூடுகிடாமை நீக்கிவை யிப்லீசைநீ
இங்குமங்கும் கொன்பலத்தை கார்த்துநீ
எங்குஞ் சுகமேதந்து கிருபைசெய்யிநீ
இன்னம்ஸவ்ஹில் ஹாலஸக்கறாத்தின்லெனு
இன்னமற்று முதவியெல்லா மிப்லெனு

1-வது உணர்ச்சி வருத்துதல் அதே இராகம்.

இந்த உலகின் வாழ்வுநிலையா அல்லவா
இந்த அப்யானில் தெரிந்துகொள்ளவா
நகையுமுதலுமிழந்து பிரியலாகுமே
நகரமிழந்து கபுரு பகரமாகுமே
பெண்டுபிள்ளை தொந்தர நீபிரிகுவாய்
பின்புகாண மீண்டிடாம லாகுவாய்

ம ர ண...

வீடுவாசல் காடுதோட்டம் நீங்...
விரும்பி திரும்பி வந்திடாமல் நே...
பெண்டுபிள்ளை நேசாசை இங்கு...
பின்பு அவரோடே துகூட வேளைகா...

ஆடுமாடு வாகனங்கள் நீங்குமே
ஆறுமில்லா காடுபோக நேருமே
எங்கும்போயி பின்புவருவோ மென்பமே
இறந்துபோயி வருவதுண்டோ செல்லுமே

இன்னபொருளும் சொத்துமுடைகள் வேண்டுமே
இன்னமின்ன கட்டிடங்கள் வேண்டுமே
என்று நாட்டமிருந்த திழந்துசாவியே
எண்ணுமிளா பயணமே என்னுவியே

சேதமே புன்மனதிலாவ லேதும்ம
சேர்ந்துவருமுன் கபுருசேர நேருமே
இரவுபகலா வயதைவீணி லிழந்தையே
இறையோ னிடத்திலென்ன சொல்வேன்தோஷியே

கேலிசிரிப்பு லஹுவி லிருந்தியே
கேடுபிடிக்க வழிகளுனக்கு வருந்தியே
எந்தவிதமு மௌத்துபிடித்து போவேநீ
யேதுமுதவா தோஷியாக ஆவேநீ

ஆகையாலிது நிலையிலாக லோகமே
ஆக்கிரம்தான் நிலைமக்கா மன்றோதுமே.

2-வது இதுவுமது அதே இராகம்.

நிலவுபொழுது மாஹ்தாபு போலவே
நிலத்திலாண்டு மரணமடைந்தார் கேளுவே

அன்பியாக்கள் முருஸலீங்க ளெத்தனே
அன்பரான வொலிகளத்தா பெத்தனே
ஸாலிஹீங்கள் ஷாதிகீங்க ளெத்தனே
ஸாயிமீங்கள் ஷாபிரீங்க ளெத்தனே

ஆலிமீங்க ஆபிதீங்க ளெத்தனே
ஆமிலீங்க ளாஷிகீங்க ளெத்தனே
ஆரிபீங்க ளாமிலீங்க ளெத்தனே
ஹாக்கிமீங்க ளாதிலீங்க ளெத்தனே

தாரிக்குஷ் ஷுஹ்வாரத்தி னல்லோ மாத்தனே
தாயிபீங்கள் ஸாஹிரீங்க ளெத்தனே

11389

இல்மு பதினொ ளோதியோர்க ளெத்தனே
இல்மு மொழுங்கு முடையவர்க ளெத்தனே

தாரெதுனியா விழந்துமாண்டா ரறுயிதே
திருப்பி வருவா ரென்றிராம லாச்சுவே

சிறிதுபேரின் பேருமிடமு மறைந்ததே
சிறிதுபேரின் கபறுக்குறியு மறைந்ததே

இந்தஉலக வாழ்வைநம்பி இருந்துநீ
இறையோ னிடத்தில் துன்பத்திங் காகாதே நீ.

3-வது இதுவுமது அதே இராகம்.

ஸையதுஸ்ஸா தாத்துகைருல் அன்பியா
ககலலோக மவருக்கே படைத்தான் குதா

அந்தநபியே போனபின்பு யாருகாண்
அந்திபகலு மெனக்குசத மென்போருகாண்

நபிஷுஹைறபு சீதுனூகு மெங்கேகாண்
நம்மையீன்ற தாயிஹவ்வா வெங்கோண்

நபி சலைமானிபுனு தாவூதெங்கேகாண்
நபி அபுல்பஷறுன ஆதமெங்கேகாண்

எங்கேமூஸா எங்கேயீசா சொல்லுகாண்
எங்கெதாவூ தெங்கேஹாரூ னேதுகாண்

எங்கே இப்றுஹீ இன்மாயீலுகாண்
எங்கே யஹகூபுயூசு இல் யாசுகாண்

எங்கே இத்ரீசெங்கே அய்யூபஜீஸ்காண்
எங்கே மற்றும்பாக்கி அன்பியாஉகாண்

நபிகளிஷ்ட ரருமைமக்க ளெங்கேகாண்
நமக்கு தீனை துபிக்கத் தந்தோ ரெங்கேகாண்

இத்தனை சிதேவியு மாண்டாரேகாண்
எத்தனைநா ளிங்குனக்கு லீவுகாண்

இத்தவுலகில் நல்ல அமலை தேடுகாண்
இறையோ னிடத்தில் மக்பிரத்தை கேளுகாண்.

4-வது இதுவுமது அதே இராகம்.

வருஷமைந் நூறிங்கேயிர் ஷணுண்டுகாண்
வழியில்நீ லா றுநடுவிலே மாண்டானேகாண்

அவ்ஜனு ஆயிரம் பரவஸிங்குகாண்
அவ்ஜஆண்டு ஓரடியில் மாண்டானேகாண்

காரூனுசொத்தின் சமத்தினு லாண்டானேகாண்
காபிர்ஹாரூமிமண் முழுங்கலா னுனேகாண்
ஷத்தாது சதமாவாழ சொர்க்கம் கட்டிகாண்
ஷண்டாளன் விழுந்து செத்து மாண்டான் கேளுகாண்

ஆதுகூட்ட மெந்தவகையி லாச்சுகாண்
அறிந்து பயந்து நேர்வழியில் தங்குகாண்
ஊத்துகூட்டமும் தமூது கவுமுகாண்
லஹனத் துல்லாவில் ஹலாக்கா போச்சுகாண்

நப்புனேவல் தள்ளிமார் செய்தார்காண்
நப்புகஹருப் கோபமு மடைந்தார்காண்
நீருதாக்குமாறு செய்யாதீர்காண்
நீண்டகாலம் நரகிலே வேகாதேகாண்

ஆரையும்நீர் துன்பஞ் செய்யாதீரே காண்
ஆருமடையாம் பெருஹலாக் கடையாதே காண்.

5-வது இதுவுமது அதே இராகம்.

சிலர் சதமென்றிருந்த வாழ்வை யெண்ணியே
சொந்தநாயகன் சொன்னசொல்லைத் தள்ளியே
ஏதுகேள்வி செத்தபின் சொல்லைத் தள்ளியே
ஏககருமம் பாவஞ்செய்ய எண்ணியே

குருதுரோகம் செய்தவர்க ளெத்தனே
ரடுங்குபாடம் செய்தவர்க ளெத்தனே
அடித்துப்பழகி குடிகெடுத்தோ ரெத்தனே
அடுத்துச்சேர்ந்து பறித்துப் பகைத்தோ ரெத்தனே

எண்ணந்தீரமட்டும் சேர்ந்திருந்தோ ரெத்தனே
எண்ணமுடிந்தா லெதிர்த்து பகைத்தோ ரெத்தனே
ஒண்டினோரை குடிகெடுத்தோ ரெத்தனே
ஒண்டுசொல்லி றண்டகித்தோ ரெத்தனே

களவுமோசஞ் செய்துபிழைத்தோ ரெத்தனே
கடனைகொடுக்கா கடுங்குபாட ரெத்தனே
புருஷனிருக்க பிறரைப்புணர்ந்தோ ரெத்தனே
பிறரைப்புணர்ந்து பெண்டிழந்தோ ரெத்தனே

வேசிதனத்தில் வயதிழந்தோ ரெத்தனே
வாசியில்லா தோயிலானோ ரெத்தனே

அல்லும்பகலும் பொருளைக்காத்தோ ரெத்தனே
அறவே ஈயாவுறுத்தனே ரெத்தனே

பொய்யை மெய்யா இட்டுகட்டி யெத்தனே
போக்கிரிகளாகி கெட்டா ரெத்தனே

தொழிலு வட்டிசெய்து கெட்டோ ரெத்தனே
தொழுகை நோன்பை விட்டுகெட்டோ ரெத்தனே

பொய்சாட்சி சத்தியம் செய்பவர்க ளெத்தனே
பூமியிலேற்பட்டு கெட்டோ ரெத்தனே

கள்ளு சாராயம் குடிப்போ ரெத்தனே
கர்த்தனே வலைத்தள்ளி நடப்போ ரெத்தனே

தந்தைதாயை நோகவைத்தோ ரெத்தனே
தன்பிறந் தோரைப் பகைத்தோ ரெத்தனே

சொந்தபந்தை வெறுக்கடித்தோ ரெத்தனே
சுகங்கொடுத்தோ ரோடெதிர்த்தோ ரெத்தனே

ருணத்துரோகி குருத்துரோகி யெத்தனே
ருணங்கொடுத்தோரை வதைத்தோ ரெத்தனே

கூட்டிக்கெடுத்துக் கூலிவாங்கி யெத்தனே
கொடுமை லஞ்சம் வாங்கிதின்றோ ரெத்தனே

எதிரிவாழக்கண்டு வெடிப்போ ரெத்தனே
எரிந்து தீங்கை யெதிர்பார்ப்போ ரெத்தனே

ஆலிமோடு ஹஸ்துவைப்போ ரெத்தனே
ஆழநரகில் போறவாக ளெத்தனே

சூதுஆடி காசுதேடி யெத்தனே
சொர்க்கமிழந்து நரகிலாவோ ரெத்தனே

கூடுபஞ்சா கல்வணங்கி யெத்தனே
கொடியடம் தாபூத்தை வணங்கி யெத்தனே

இன்ன மிவைகள் போலபாவ மெத்தனே
இந்தலோகில் செய்துகெடுவோ ரெத்தனே

இந்தவிதமா யுள்ளமனுஷா ளெத்தனே
இந்தவுலகி லிருந்துமடிந்தார் எத்தனே

நரகமிவரைப்போ லவர்க்கே நேசனே
நாயன் படைத்தான் பயந்துக்கொள்நீ வாசனே

இலக்ஷ வருஷமிருந்து மொருநாள் சாவேநீ
லக்னத்துல்லா வாகிடாமல் பேணுநீ

6-வது இதுவுமது. அதே இராகம்

மூச்சைவிட்டு மூச்சிழுக்கு முன்னமே
மௌத்துமலக்கு பிடிக்கப்பட்டோ ரெத்தனே
பேச்சுப்பேசி பேச்செடுக்கு முன்னமே
பிடித்துமலக்குல் மௌத்து செத்தோ ரெத்தனே

படுத்துறங்கி யெழுந்திடாமல் நேசனே
படுக்கைதனிலே மௌத்தடைந்தோ ரெத்தனே
அடியெடுத்து வைக்குமுன்னே நேசனே
அடுத்துமௌத்து பிடிக்கப்பட்டோ ரெத்தனே

சிமிட்டுகண்ணைச் சிமிட்டுமுன்னே நேசனே
செத்தவர்க ளிந்தவுலகி லெத்தனே
நேற்றிருந்து இன்றிறந்தோ ரெத்தனே
நெருப்பிலெரிந்து கரிகிசெத்தோ ரெத்தனே

கவுந்துகப்ப லிறந்தவர்க ளெத்தனே
கயிறைக் கழுத்தில் மாட்டிச்செத்தோ ரெத்தனே
ஒத்தை ஸஜ்தா செய்துமருஜஸ்தா முன்னே
உற்றவுயிரை விட்டுசெத்தோ ரெத்தனே

நெலைருக்குஹறுகு இருப்பிலிறந்தோ ரெத்தனே
நஞ்சுதின்று வெறுத்துசெத்தோ ரெத்தனே
விஷவியாதி பேதியிலிறந்தோ ரெத்தனே
விஷங்கடிதா [illegible]னிலிறந்தோ ரெத்தனே

ஆகையினாலிரு நிலையில்லாத வாழ்வுகாண்
ஆகிரத்தா னிலைமக்காமென் றோதுகாண்
இந்தவுலகம் யாருக்கும் சதமில்லையே
இங்கேயாரும் நிகழவாழ்ந்தோ ரில்லையே

இதுவை நம்பி யிருந்தவற்கு நாசமே
எதிலும்வழி கேடாய்ப்போனால் மோசமே
ஆகிரத்தை நம்பினோர்க்கு வாசமே
அங்கேயுதவ நன்மையிங்கே தேடுமே

எந்தவிதமு எதிலுமாகா திறந்துநீ
இந்தவுலகை விட்டுப்பிரிந்து போறேநீ
ஆகையாலே தேநெல்ல செய்கைநீ
ஆகிரத்தில் மோக்ஷம் பெறுவே கேளுநீ

7-வது இதுவுமது அதே இராகம்.

என்னசெய்வோ துஷ்டரே கைசேதமே
எந்தவிதமு மௌத்துபிடித்தே தீருமே
புறந்திடமே சாமிருக்க வேண்டுமே
பிறந்ததாலே மௌத்து சேர்ந்துக்கொள்ளுமே

நாயனுட்டம்போல அதுவே முடிந்தது
நன்றைசெய்யி தீங்கை நீக்குவிதியது
மக்கமனுஷா ளருமையில் றகுமானைநீர்
மறந்திடாதே செய்கிருபை மிகுதிநீ

மௌத்துவருத்த மூத்தன்பேரி லாகைவில்
மக்கமனுஷா ளுதவியேது பாரதில்
அந்தவேளை தாய்தகப்ப ரெங்கேயோ
அண்ணன் தங்கை மக்கமனுஷா ளெங்கேயோ

தம்பி தமக்கை சொந்தநேச ரெங்கேயோ
தாதி தாதா நானிநானு வெங்கேயோ
சிறியபெரிய தந்தைபாட்டி யெங்கேயோ
சிறியபெரிய மாமுகாலா வெங்கேயோ

பெண்டுபிள்ளை பேரல்லா மெங்கேயோ
பிரியமருமைக்கார ரெல்லா மெங்கேயோ
புருஷனுரு மற்றுமுறவா ரெங்கேயோ
பெருமைப் பொருளு மருமைநகையு மெங்கேயோ

எந்தப்பொருளு மந்தவேளை நேசரே
இடையிலுதவி செய்திடாது நீதரே
காசுபணங்க ளந்தவேளை யெங்கேயோ
காடுவாஸ லூடுதோட்ட மெங்கேயோ

ஆசைவைத்து சேர்த்தபொருளு மெங்கேயோ
ஆடுமாடு வாகனங்க ளெங்கேயோ
நாடுநகர் மாணியங்க ளெங்கேயோ
நம்மனடிபணியி னூழியர்க ளெங்கேயோ

நாம்செய்த நன்மைதவிர ஏதுமோ
நமக்கு அந்த வேளையுதவா தோதுமே
ஆகையாலே தேடுமெத்த நன்மையே
ஆகிரத்தி லுண்டுனக்கு சங்கையே.

சென்றவயது சென்றதப்பா வீணிலே
சொல்லுவார வயதைப்போக்கு தீனிலே

8-வது இதுவுமது பதம்

மரணம்விடாது மலக்குல் மௌத்தென்னுமுன்னை
மறந்துவிடாது பலசமத்திருந்துமு அனை பயணம்விடாது 1

கல்வினுட்டுளைசெய்து தேரைபோலிருந்தாலும்
கருங்கல்லு கோட்டைக்குள் மறைவாவொளித்தாலும்
கடலும் திடலும்விட்டு கண்மாயமானாலும்
கணக்கற்ற மருந்தைநீ பொசித்து செமித்தாலும் 2

கோடிமனுஷாளுக்குள் கூடிக்கொண்டிருந்தாலும்
கணக்கற்ற வாசர்கள் கைக்குள்ளிருந்தாலும்
உள்ளூரில்பேதிவந்தா லூரூருக்கோடினாலும்
அல்லும்பகலும்நீனி அனுதினம் குறைந்தாலும் 3

எமனை பயந்துதினம் இருக்கண்ணை விழித்தாலும்
அறவே எழுந்துறக்கம் ஆந்தைபோலிருந்தாலும்
பெருத்த இருளிடத்தில் துரத்த எமன்வருகும்
பேடித் தனத்தினாலே பந்தம் பிடித்தாலும் 4

பேய்பிசாசைக்கண்டு பயந்தால் எமன்வருகும்
பயணம் தனியே சென்றால் பகையெதிரில்வரும்
இந்த நினைவுக்கொண்டு மாந்திரக்காரிடம்
ஓதோடு சரடுநூலை வாங்கிசுமந்த போதும் 5

மூச்சை யடக்கிக்கொண்டு முக்கோடி வருஷமட்டும்
பேச்சை யடக்கிமலை பொதும்பி லிருந்துக்கொண்டும்
மனுஷாளை விட்டொழிந்து மறவாய் திரிந்துக்கொண்டும்
ஏமன்வாரவழி எங்கேயெனவே நினைத்தபோதும். 6

9-வது இதுவுமது மத்னவி இராகம்.

அங்கே யுதவநலவை இங்கேதேடுகாண்
அங்கேசொர்க்கம் சங்கைசுகத்தை சேருகாண் 1

றப்பிநபியு சொன்ன சொல்லைக் கேளுகாண்
ரகமத்துல்லாஹிதினம்நீ தேடுகாண் 2

மாறவர்க்குக் கொஞ்சமும் செய்யாதேகாண்
மாறுசெய்து தோஸகை கொல்லாதேகாண் 3

முன்னை மாறுசெய்து கெட்டோர் பரடுகாண்
மூத்து உலமாநாவு சொல்லகேளுகாண் 4

பாவமறவே செய்திடாதே பேணுகான்
பேணுகாணும் பேணுகாணும் பேணுகாண் 5

பாவமேது மானபோது சொல்லுகாண்
பதட்டமழுகை விசனத்தோடே யோதுகாண் 6

இத்தவெந்தன் பாவத்தை நீ ஜகபூர்
இரக்கஞ்செய்து பொறுக்கவேணும்நீ ஜரூர் 7

செய்து தவுபாவிட்ட பிழையை பின்புகாண்
செய்திடாமல் பேணுபின்பு வம்பகாண் 8

செய்திடாமலிப்ப தௌபாசாவுலே
செய்யலாமென்போரு வீடு ஞரநீல 9

அஞ்சுவேளைதொழுது மிஸ்திக்கு பாரைநீ
அஞ்சி கெஞ்சியோதிகே ஞரைப்பைநீ 10

நித்தமோது இந்த இஸ்திக்கு பாரைநீ
நிஷ்டயம்நீ சுத்தபெறுவே பாருநீ 11

அஸதக்பிருல்லா ஹில்லாதீ லாஇலாஹ இல்லாஹு
வல் ஹையுல்கையூமுக அத்துபு இலேஹி
நபிகள் அலேஹி முஸ்ஸலாத்து' வஸ்ஸலாமு
ஸக்ருது ஹாலே விசனிக்குதல்.

அதே இராகம்.

ஸையதுஸ்ஸா தாத்திகைருல் அம்பியா
சொல்லி சக்கறுத்தாஹுவென்று மிகுதியா 1

ஆத்து ஆத்து மௌத்தே மௌத்தேயென்பவர்
அழுது அழுது தினமும் பெருமூச்சிவிட்டவர் 2

சொலித்து அழுகை நீரைநொந்து தன்மனம்
சொல்லுவார்களும்மதத்திற்கு அனுதினம் 3

உம்சத்தா சக்ருத்துஹாலே நினையுங்கள்
உலவாழ்வில் வயதிழக்காதீர்கள் 4

ஹிம்மத்தா யீமானைக்கார்த்து வையுங்கள்
இஜ்ஜத்தா இஸ்லாமை நடந்துகொள்ளுங்கள் 5

துஷ்டத்தனத்தை வெறுத்துத் தீனைப்பிடியுங்கள்
துன்பமௌத்தி லணுகிடாது பணியுங்கள் 6

ஆரையும் ஸக்கராது விட்டதல்லகாண்
ஆருடுகுமப்போது ஹைறூனுண்டுகாண்

மௌத்துஹாலே ஆதம்ஸபியுல்லாநிதம்
மொத்தநொந்து சொல்வாரா மனுதினம் 8

என்னசெய்வே னென்னைமௌத்து பிடிக்குமோ
என்ன ஏனும் தங்கமுடியா கஷ்டமே 9

ஷிதுநபியின் செய்தி என்ன சொல்லநான்
செழிப்புமேது சிரிப்புமேது அழுகைதான் 10

சொல்லிக்கொண்டே வாஹசக்கருதாஹவே
செல்லவைத்தார் வயதை ஷிதுசாகிபே 11

நூகுநித்தம் மௌத்து ஸக்ராத் தெண்ணியே
நொந்துமெத்த வடிக்குவார் கண் தண்ணியே 12

நினைத்து மௌத்தை எந்நாளும் ஜக்கிரியா
நனையதடி அழகுதார்கள் மிகுதியா 13

ஜகிரியா[illegible]ஹனர் யேஹ்யாசேதிநான்
ஸகட்டு மெழுதக்கூடுமா என்றுலேகாண் 14

நினைத்துமௌத்தே அழுதசப்த மிடுகுவார்
நனய்ஜூப்பா அழுகைநீரை வடிக்குவார் 15

கதறி அழுது சிறிதுவேளை மயங்கியே
கஷ்ட மௌத்தை நினைது பதறிநடுங்கியே 16

காடோ செடியோ மலையோ புதரோ தேடியே
கண்ணுமுகமு மழுது அழுது வீங்கியே 17

போய் சிலநாள்சென்று வருவார்வாடியே
பின்னு மௌத்தை நினைத்துபோவா ரோடியே 18

நினைத்து இப்ருஹீமு சக்கருத்தை தினம்
நொந்து அழுது புலம்புவார்க ளனுதினம் 19

மௌத்து கஷ்டம்போலே கஷ்டமுண்டுமா
மௌனத்தைவிட்டும் தப்பித்தோரைக்கண்டமா 20

என்னசெய்வே னென்னசெய்வே னென்றேங்குவார்
என்றுசொல்லி அழுகுவார்கள் ஸார ஸார் 21

அழுகைநீகு தாடிநனைந்து வழியுமாம்
அழகில் நடந்தாடி இப்ருஹிமுக்காம் 22

இன்ன மற்றஅம்பியாக்கள் ஹாலைநான்
என்னயிந்த சிறுகித்தாபி லெழுதகாண் 23

நபிகளிந்தி ஹாவிலான போதுநீ
நம்பிதுணியா விழுந்திடாதே தீனேநீ 24

ஒலிகள் ரஹமத்துல்லாஹி அலைஹிம் ஸக்கறாத்து
ஹாலை விசனிக்குதல்.

அதே இராகம்.

சையதுஸ்ஸா தாத்திகைருல் அருலியா
கைதுல் அக்காபிகைருல் அஸ்பியா 1

குத்துபு அக்தாபா அப்துல்காதிரு
கதறி அழுவார் மௌனத்தை நினைது ஜாக்கிரு 2

அழுது யாஹூவென்று மூச்சவிடுகுவார்
ஆஹசக்கறாத்தாஹூவென்றே அழுகுவார் 3

ராவுபகலு மிந்தவசன ஹாலுலே
ராஜரிழந் தா ருயிரை இந்த பாரிலே 4

பாம்பவஸீது ஹஸனு இப்றுஹிமுச்கும்
பாஹனீபா ஸூபி சஸ்ஸாலியுக்கும் 5

அல்லும்பகலு மழுகையேதா னிருந்து
அடுத்து அடுத்து மௌத்துநினைவே கடந்தது 6

மாலிக்கு ஹம்புல் இமாமு ஷாபியி
மாணிக்கம் அப்துல்வஹ்ஹாபு யாபியி 7

னகருல் அக்தாபி யிமாமு ஷாதிலி
கைருக அஸ்பியாயி குல்பக்காலெயலி 8

அழுகுவார்க்க ளெண்ணி மௌத்தைஸார் ஸார்
அலறுவார்களெண்ணி மௌத்தை சிறிதுபார் 9

ஹஜ்ரத்து ஷாஹூல் ஹமூது அதனமா
அழுகுவார்க ளெண்ணி மௌத்தை மிகுகமா 10

பாக்கிவொலிகள் பரடுமிந்த பாடுதான்
பாருமிங்கே மௌந்திழந்தோ ராருகாண் 11

சொல்லமெத்த அவுலியாக்காள் ஹாலைநான்
சின்ன புஸ்தகமே யீது தாளாதுகாண் 12

பேயாய்க்கேளு ஆலிமீகள் சொல்லநீ
போதனையில் போயிடாதே கேளுநீ 13

அவுலியாக்கள் பாடுயிது ஒன்றுச்சுகாண்
ஹாலுவுந்த னென்னகொஞ்சம் மோசிகாண் 14

சக்றுத்து விபரம் இதே இராகம்.

மௌத்து வருத்தம் துன்பத்தைநீர் கேளுகாண்
மிகுந்த வருததம் சஞ்சலம் கைசேதமே 1

எலும்பு நரம்பு சொருங்கி யறுந்து போகுங்காண்
என்னவலும் நம்மளால் கைசேதமே 2

எலந்தைமுள்ளில் மெளிந்த துணியைப்போட்டுகொண்
எடுக்க இழுக்கும் போலயாம் கைசேதமே 3

அறுத்த கோழி துடிக்கும்போலவ ஹாலுகான்
அதனமதிலும் துடிக்கலாகும் சேதமே 4

கோழிபிடித்து சாறுபிழியம் போலகாண்
கர்த்தன் மலக்கு பிழியுவார்கள் கைசேதமே 5

பாக்குமரத்தை பாழமாக்கும் போலேகாண்
பாளமாக்க படுமுடல் கைசேதமே 6

புலிகள் நரிகள் கிழிந்தபோதிலும் வேசுகாண்
பொறுக்கமுடியா துயரமே கைசேதமே 7

பொருத்த கெருப்பி லெரிந்துவெடித்து லேசுகாண்
பொறுக்கமுடியா வருத்தமௌத்து சேதமே 8

வெட்டிதூளு செய்வதுமாது லேசுகாண்
விட்டுப்போக வருத்தமே கைசேதமே 9

தட்டிநெருக்கி தீயிலெரிப்பது லேசுகாண்
தட்டஏலா கஷ்டமே கைசேதமே 10

செக்கிலாட்டி கொள்வதுமது லேசுகா
சிக்கிலாட படுமூடல் கைசேதமே 11

கதறகதறசதை வருகும்போலேகாண்
கதறமலக்கு வறைக்குவார்கள் கைசேதமே 12

சாகுமுன்னே கண்ணுனூறும் பாருகாண
சஞ்சலங்கள் மிகுதமே கைசேதமே 13

நாவடைந்து திட்டுமுட்டாய் மூச்சுகாண்
காட்டமுழிகளாகுமே கைசேதமே 14

பட்டுபுட்டு என்றுமொழிகள் விட்டுகாண்
புட்டுபட்டு போகுமே கைசேதமே 15

கோடிஜனங்களிருந்து லாபமென்னகாண்
கோடுதட்டி உதவிடார்கள் கைசேதமே 16

பின்பு கொள்வாருயிறை மலக்குல் மௌத்து காண்
புரியுமிந்த பிம்பம் துன்பம்சேதமே 17

கத்திபேசி கொண்டிருந்த வாய்காண்
கத்திடாமல் மூடுமே கைசேதமே 18

கடந்தவேலை செய்திருந்த கையிகாண்
கெடந்து சோம்பி தூங்குமே கைசேதமே 19

நடக்கமடக்க ஓடதிரிந்த காலுகாண்
நீட்டிவைத்து தூங்குமே கைசேதமே 30

எண்ணுமெத்த சுகமடைந்த கூடுகாண்
இன்றுமண்ணில் தூங்குமே கைசேதமே 21

வெந்து வெந்து நாரவேளை யாச்சகாண்
வந்து வாழ்வை தேதினி கைசேதமே 22

இங்கு நீனி மூன்றுவேளை யுண்டுகாண்
இனி இல்லாம்லாகுமே கைசேதமே 23

நல்லவர்க்கு நிகமத்தெங்கு முண்டுகாண்
நல்லமௌத்து மவருக்கே சந்தோஷமே 24

பிறந்தமிங்கே பிறப்பித்தோனை வணங்ககாண்
பிழந்து வணங்கா பாவமே கைசேதமே 25

இந்தவுலகில் வாழ்வுகனவை போலேகாண்
இதுவை நம்பி இருந்தவர்க்கு சேதமே 26

அழகு வயதை வீணில்செலவு செய்துகாண்
அங்கேமோசம் பெறுவையே கைசேதமே 27

கடந்தகாவ மாண்டுமொருகா னிறந்துகாண்
கெடந்து கபரிலுழருவே கைசேதமே 28

ஆகையாலே செய்யினல்ல செய்கைகாண்
ஆகிரத்தி லுண்டுனக்கு வாசமே 29

கேசுமாகும் வெளத்தகஷ்டம் கேளுகாண்
லாயிலாஹ இல்லல்லாஹ ஓதுவே 30

மவுத்திசோரு மலக்குசோல்வது அதே இராகம்

உயிரைமலக்கு பத்து முனைருமலக்குகாண்
உனக்குசொல்லும் செய்திகேள் கைசேதமே 1

இந்நாளு வரையிலாண்டு இப்பகாண்
இறந்துபோகப் போகிறையே கைசேதமே 2

இந்ததுனியாவுக்கு தேடிவைத்தே காண்
இந்தவேளை யுதவுதா கைசேதமே 3

கொஞ்சநாளைக் காகவயதை யிழந்திருகாண்
கெஞ்சிநாள் மீள்வதில்லை கைசேதயே 4

இந்த உலகினுசையில் வணங்காமேகாண்
இருந்துவழி கேடானையே கைசேதமே 5

மௌத்துசெய்தி பக்கமென்ற சொல்லைகாண்
மனதிலெண்ணி நொந்தியா கைசேதமே 6

மௌத்துபிறகு வீடுதவக்கே தென்றுகாண்
மௌத்துஹாலி லறிவையேகை சேதமே 7

இவ்லை நல்லோர்பேரிலேனும் தொல்லைகாண்
இல்லைதுன்ப மவருபேரி லேதுமே 8

துய்யவர்கள் சாககொஞ்ச முன்னேகாண்
தனக்கு சொர்க்கம் காண்குவார் சந்தோஷமே 9

துய்யசெய்கை செய்திருந்தா லின்னுஸ்காண்
துய்யசொர்க்கம் காண்குமே சந்தோஷமே 10

வயதைவிணி விழுந்துகெட்ட பாவிகாண்
வாழ்நரகம் காண்குவான் கைசேதமே 11

நாளுதோறு நன்மைசெய்ய மறக்காதேகாண்
நாளைவாழ நரகமே தேடாதேகாண் 12

மவுத்து ஹாலில் இபுலீசுவந்து ஏமாற்றுதல்

மொத்தும்போது தாகமென்ன சொல்லகான்
மனதுவைத்து கேளுமிந்த கஷ்டமே 1

சகலகடலின் நீரைக்குடித்த போதிலும்
சாற்றுமடங்கா தாகமே கைசேதமே 2

அந்தவேளை விந்து இப்லீசுகாண்
அடுத்துவந்து மாத்துவான் கைசேதமே 3

உனக்குபழக்க வாழிலொருவர் போலவன்
உகந்து வேஷ மெடுக்குவான் கைசேதமே 4

நிறைந்தபெருப்ப மானதண்ணீர் பாத்திரம்
நேரிலுனக்கு வைத்துசொல்வான் சேதமே 5

என்னகஷ்டம் துன்பமுன்னைத் தொட்டது
என்னநோயி லாகினுய் கைசேதமே 6

கெட்டவர்கள் சொல்வாரா மிஷ்டனே
குடிக்கயிந்த தண்ணீர்தாகை சேதமே 7

சொல்லுவானு மிந்தநீ ருனக்காகநான்
சொந்தமாக கொண்டுவந்தேன் நேசனே 8

தீனைவிட்டு இறங்குதா உன்றென்றுசொல்
தினமொதுங்கி தெளிவேநீ சந்தோஷமே 9

உலகம்படைத்தே னில்லையென்றும் சொல்லுநீ
உனக்குத்தாகம் தீர்க்கிறேன் சந்தோஷமே 10

அகமதுக்கு இல்லைனுபுவத் தென்றுசொல்
அகத்தியம் சொல்லு நீருதாரான் நேசனே 11

கெட்டவர்களமையுவார்கள் இபுலீஸ்கு
கெடுத்து ஈமானீறு மிய்யான் சேதமே 12

உடைத்துநீறு பாத்திரத்தை போகுவான்
உடனே ஈமானுயிரும்போகும் சேதமே 13

இதுவுமுட்டனே இன்னமிருந்த விதத்திலே
ஏகக்கெடுதல் செய்குவாள் கைசேதமே 14

நல்லவர்களகப்பட்டார்கள் யிபுலீசுக்கு
நாடிவர தேவன் சந்தோஷமே 15

நல்லவழியே தேடுநீ யெக்காலமும்
நல்லமெத்து மோக்ஷமடைவார் எங்கேயும் 16

ரூஹு உடலுக்குச் சோல்லுதல் அதே இராகம்

ரூஹு உடலை விட்டுப்பிரியும் போதுகாண்
ரூஹுதற்கு சொல்வதைநீர் கேளுகாண் 1

உடலே உன்னிலிருந்து இதுகாள் வரையிலு
மொழிந்தனுன்னை விட்டுமலக்குல் வெத்திடலும் 2

செய்கையெல்லாம் கெட்டதேநீ செய்தியே
தேசத்தில் வயதைநீ செலவு செய்தியே 3

லக்வுலஹுபில் வயதிழந்து செய்தியே
லகனத்துல்லாவென்று நீபேருபெற்றையே 4

வாழ்வுதுனியா வாசமென்று வாழ்ந்தியே
வல்லமையெல்லா மிழந்து இப்போ தாழ்த்தியே 5

நல்ல அமலை செய்துநீ வாழாமையே
நஞ்சதிண்ட மீனுவமை யானையே 6

வயதைவீணி லாக்கவேண்டா மென்றுநாள்
வயதிலெல்லா மோதியுமறந் தாயேகாண் 7

இன்றையோடு செய்கையெல்லா முடிந்தது
இந்தலோக முன்னைவிட்டுப் பிரிந்தது 8

நன்மையொன்றி லிருக்குமானல் வாசமே
நாளைசொர்க்க முண்டுமக்கு பாருமே 9

தின்மையானல் துன்பமேதான் மோசமே
தீங்குதோஸ் காகுமேகைசேதமே 10

இந்தஹாலை சொல்லிரூஹு நீங்குமே
இந்தலோக மெண்ணுமோஸம் பண்ணுமே 11

ரூஹு போனபின் ஜனங்கள் அழுவதை மையத்துகேட்டு
தேருதல் சோல்லுவது ரஹுமான் கன்னி இராகம்

சூழஉள்ளபேருகளே சூழ்ந்ததனக் கழுகாதீர்
சத்தனேவல் வந்தெனக்கு செததொழிந்தே னழுகாதீர் 1

இன்னமிருப்பேனென்று எண்ணமிகத் தரிந்தேன்
எண்ணமழிந்து இப்போதிறந்தே னழுகாதீர் 2

அல்லுப்பகல் வயதை அனியாயத்தில் இழந்தேன்
அங்கேஎன்ன சொல்வேனென் றரண்டுபோறேனழுகாதீர் 3

என்னென்னவெண்ண மெல்லாமேகமாயெண்ணிருந்தேன்
எண்ணமேது முடியாம விறந்தேனழுகாதீர் 4

வீடுவாசல் மக்களர்சை விரும்பிவித்த முகந்திருந்ததன்
வீடுமற்றதுமிழந்து வீணானே னழுகாதீர் 5

இன்னும்சற்றுவயதிருந்தா னென்னென்னவேலைசெய்வே
பின்னேயின்னம் மீனாமல் பிரிந்தேனழுகாதீர் [ன்

என்சாவுக்கழுதா வேதுநக்குல பங்கள்காண்
உன்சாவை நோட்டமிடு மென்சாவுக்கழுகாதீர் 7

மையத்து மக்களுக்குச் சொல்வது அதே இராகம்

மக்களழுகும்போது மையத்தறிந்து சொல்லும்
ஹக்கனழைத்துபோறே னழுகைநீர்வடியாதீர் 1

பெற்றேன் வளர்த்தேன் பிரியமுங்கள் பேரில்வைத்தேன்
செத்தே னிழந்துங்களைச் செல்வரே யழுகாதீர் 2

என்னாளும் செழிப்பா யிருக்கநீங்கள் கண்குளிர்ந்தேன்
இன்னாளி லென்னுயிரை எமன்பிடித்தா ரழுகாதீர் 3

அல்லாஹுஎன்னாளும் ஆதரவு உங்களுக்கு
வல்லோனி னேவனன்னை சொல்லக்கழுகாதீர் 4

என்னீரல்துண்டோ எத்தீமானீர் இன்றோடு
பன்னிருகண்ணீரு பதறிநொந்தழுகாதீர் 5

உங்கள்கையினா லங்கே யதாபடைவேன்
எங்குமெனக்குசுக மேற்றக்கேளு மழுகாதீர் 6

உங்கள்போல துக்கவாழு எங்குமிருக்குதிப்போ
எங்கெங்கலைவீர்களோ என்முன்னழுகாதீர் 7

இங்கிருக்கும்போதே என்முகத்தைப் பார்த்திடுங்கள்
இங்கேவிட்டுப் போனபின்பு ஏக்கங்கொண்டழுகாதீர் 8

வேலைமிகுதமாச்சு வீணாக நேரமாச்சு
ஏழையைக் குளிப்பாட்டி எடுங்காள் நொந்தழுகாதீர் 9

மையத்து தன் பந்துக்களுக்குச்சொல்வது அதே இராகம்

என்சொந்த பந்துக்களே என்முகவந்தீர்காண்
உஞ்சாவை நோட்டமிடு மெஞ்சாவுக் கழுகாதீர் 1

கூட்ட ... ட்டமுடனே குலாவிருந்த வுங்களையான்
கோட்டமிடும் தனிபானை நொந்துமன மழுகாதீர் 2

இன்னமுங்களோடு இருக்கெனக்கு ஆசைகள்தான்
என்னசெய்வே னெமதூதர் எனைப்பிடித்தா ரழுகாதீர் 3

வணங்காமலிழந்தேன் வயதையெந்தன் வீணிலேதான்
சுணங்காம லெடுங்கலெலனை சேர்த்து சூழ்ந்தழுகாதீர் 4

எப்போதும்பாவி எனைப்போலுமில்லையேகாண்
என்னகூடுமென்னுல் எஞ்சாவுக்கழுகாதீர் 5

இன்னமென்ன வேதனைக ளென்பேறுமோகாண்
இன்னமென்ன சின்னமோ சேர்க்கெதனக்கழுகாதீர் 6

நான்பிறந்து வளர்ந்து நான்வாழ்ந்த வாழ்வையுங்காண்
நான்கண்ட சொர்ப்பனமால் நானறிந்தேனழுகாதீர் 7

ஆராரிருந்தும் அநேகருறவாடியும்நான்
ஆரும்துணை இல்லாம லானேனழுகாதீர் 8

இங்குநீங்களெல்லா மெனக்குதவ பந்துகள்தான்
அங்குநீங்களாரோ வழுகாதீர் 9

சொத்திருந்தபாடியால் சூழ்ந்தழுவெந்தீர்காண்
செத்தேனிழந்து சொத்தைச்சுத்திநின்றழுகாதீர் 10

எங்கெங்கோ வேலைகளுமிங்குவந் தழுகிறீர்காண்
இங்குள்ளோ ரேந்துகொள்ள யேனழுவ தழுகாதீர் 11

எனக்காகவழுவதினு லேதுமக்குநன்மைகள்தான்
உமக்குள்ளசாவை உணர்ந்தழுகும்மறக்காதீர் 12

இனிவேலையாச்சு தெனக்கிருக்க ஏலாதுகாண்
எனைத்தூக்கிக் குளிப்பாட்டி எடும்குளிக்க வழுகாதீர் 13

என்பாவமெல்லா மிறையவன் பொறுத்திடகாண்
ஒத்தாசைவைத்து உகந்துகேளு மழுகாதீர் 14

என்பாடுபோல இருக்குதுங்கள் பாடுங்கள்காண்
என்னுலுஇந்நாளை எண்ணிருங்களழுகாதீர் 15

குளிப்பாட்டும்போது மையத்து சொல்வது மத்னவி இராகம்.

மைத்ததெடுத்து மக்கள் மனுஷாள் கழுகையில்
மைத்தமனுஷாள் சூழநின்றழுகையிலே 1

அந்தவேளை மைத்தழுது சொல்லுதே
எந்தனுட கொந்தமீன் போலாச்சுதே 2

உடலைமெதுவாய் தேயுமழுத்தாதீர்களே
உடலுளந்தன் ஸக்திலாம லாச்சுதே 3

கொதிக்கஉடலில் நீரைவாராதீர்களே
கொதறிசதைகள் கரிகினுடல்போ லாச்சுதே 4

அரைக்கப்போதா தாப்பை தேயாதீர்களே
அரைக்கிசெதுக்கி னரிக்கினுடல்போ லாச்சுதே 5

எறும்புகளிக்கி ஏறவதெந்தனுடலிலே
எடைகள்பெறுத்த யானைக்கனம்போ லாச்சுதே 6

மிருதமென்னைப்பிரட்டி உருட்டாதீர்களே
மிருதிநெருப்பில் வெந்தஉடல்போலாச்சுதே 7

மொரட்டுபொட்டு மிழுப்புதேப்பு ஸஹிக்கனே
மொட்டைக்கிசுருட்டி இடிகள் பெத்துடலாச்சுதே 8

தப்புதிப்பென் றெடுக்கவைக்காதீர்களே
தப்பிளடுத்த கண்டினுடலாய்போச்சுதே 9

கபனைமிருதமிறுக்கி காட்டாதீர்களே
கறக்கிவெடிக்கவைத்த உடல்போலாச்சுதே 10

சொந்தமல்ல எனக்குமாத்திர மிந்தஹால்
சந்திக்குந்தா னுங்களைக் கட்டாயத்தால் 11

கபனிடும்போதீ மையத்து சொல்வது அதே இராகம்.

மையத்திற்குக் கபனையிடுத்தும்போது
மெத்தநொந்து சொல்லுமலங்கள் நோகுது 1

சேதமேயென் மக்களே மனுஷாள்களே
செய்திசிலது சொல்லுகிறேன் ஹக்பாக்களே 2

இன்ன இன்னாரோடு பேசவில்லையே
இனிவருகே னென்றுசேர லாச்சுதே 3

மக்களாசை மற்றஞ்சை நேசரே
மெத்தறிந்து செந்திடமலாச்சுதே 4

இன்னமின்ன வேலைசெய்தேனில்லையே
இன்னமிருக்க வயதிராம லாச்சுதே 5

இந்தவயதில் சாவுஏதென் றிலிந்தனே
இந்தகபேன இப்பவுடையாக லாச்சுதே 6

எனக்கும்பெரிய மூத்தவர்களிருக்கவே
எனக்குமௌத்து வந்துபயண மாச்சுதே 7

நல்லஅம்மா லேதும்செய்தே னில்லையே
நாஸமமோஸ மென்றலையில் ஆச்சுதே 8

ஆசைதுனியா இவலடங்கவில்லையே
ஆசைதீர்க்க இனிவாராமலாச்சுதே 9

இன்றுஎன்னை போலவேவழை இல்லையே
இன்றைபோடு பெருமறைய லாச்சுதே 10

காலமெல்லாமெத்த சொத்தைச் சேர்த்தனே
கைருகைராத்து செய்திடாம லாச்சுதே 11

பொருளுசொத்தைவிட்டு உங்கள்பேரிலே
பறிக்ககொடுத்த மாளிஹாவிலாச்சுதே 12

பெருமையருமையுள்ள வெந்தன்மக்களே
பிரிந்துபோக வேளைவந்து வாச்சுதே 13

இந்தவேளை பாருமெந்தன் சூரத்தே
இந்தநேரம் இனிவராம லாச்சுதே 14

அழுகவேண்டாம் மக்களேகண் முழிக்ளே
அருமையறியா தப்புவழி யாச்சுதே 15

என்னையடக்கி சபருசெய்யுங்காள் மக்களே
என்னைமண்ணில் மறைக்கவேளை யாச்சுதே 16

தாயிதந்தை மற்றுமுள்ள நேசரே
தாவியெடுங்களென்னை வேளையாச்சுதே 17

இந்தஉலகம் மொட்டிவழி கேடாக்குமே
இஜ்ஜெத்தெல்லாம் போக்கி நரகில்சாய்க்குமே 18

வெறுத்ததுனியா பெருத்துவணக்கம் பொய்யிமே
விரும்பிநீனின் படிநடந்து வையுமே 19

கபனில் கட்டினபின் ஓர் மலக்கு சொல்வது அதே இராகம்.

உடுத்திக்கபனை மையத்திற்குத் தீர்ந்தபின்
அடுத்துமலக்கு சொல்வதைநீ கூர்ந்துஸ ன் 1

இந்த உலகின்வாழ்வு ஸதமென்றிருந்தியே
இந்தலோகை விட்டுகபனை தெரிந்தியே 2

மக்கள் மனுஷாளோடு கூடியிருந்தியே
மெத்ததுக்கம் பெற்றுகபனு டொழிந்தியே 3

வயதைவீணில் செலவுசெய்து செத்தநீ
வயிறைவளர்க்க வேலைநித்தம் செய்தநீ 4

என்னமோசம் செய்து கபனிலானேநீ
என்னமோசம் செய்து பயணமானேநீ 6

முந்திகேள்வி தொழுதியா வென்றுதமே
மற்றதெல்லாம் பிந்திகேள்வி யாகுமே 6

தொழுதியானீ ஞேன்புறம்லான் வைத்தியா
தொழிலுவட்டி நிட்டுநீக்கி பிழைத்தியா 7

புரணிகோளை விட்டுநீங்கி பிரிந்தியா
பிறரைநோகப் பேசிடாம லிருந்தியா 8

நன்மைஏதும் தேடிவைத்து செத்தையா
நல்லவழியி லிருந்துகாலம் கழித்தையா 9

ஜுலுமுபெற்றோ ரிடத்தில் சேர்ந்தையா
ஜுலுமு அநியாயத்தை விட்டுப்பிரிந்தியா 10

உந்தனஹக்மாலோடு பாவமின்றியே
எந்தனலபு மெழுந்தப்படவே 11

நல்லஅவலை செய்திருந்தா லின்றைக்கே
நல்லமாருயம் வரும்ஷக்கன்றியே 12

இன்றுஉன்னை போலதோஷி இல்லையே
இன்றுனக்கு நரகவீடே தொல்லையே 13

நாசமோச மின்றுதொட்ட தொல்லையே
நன்றுஏதும் செய்திராமல் கெட்டியே 14

கபருஹஷரு புல்ஸிராத்து நரகிலே
கஷ்டமடைய வழிகள்தேடி போறியே 15

சகலபேரு மிந்தஹாலை கேளுங்கள்
சஞ்சலத்தை வைத்துநன்மை தேடுங்கள் 16

வெளிப்புறப்படுகையில் மையத்து சோல்வது அதே இராகம்.

வீட்டுவெளியே மையத்தெடுக்கும் மோதுகாண்
வெறுத்துநொந்து சொல்வதைநீர் கேளுகாண் 1

குடும்பத்தாரே மக்களேஎன் மனிதரே
கொடுமைபிரிச்சல் வந்துநமளி லாச்சுதே 2

வேதமுறைத்தபடி நடவாமல் போச்சுதே
வேதனைகளுக் கிடங்கொடுக்க லாச்சுதே 3

அய்யோ அய்யோ விருச்சலே கைசேதமே
அய்யோ கையிகாலு நடுங்கலாச்சுதே 4

கூட்டுகிளியைப் பூனைபிடிக்கும் போலேயே
கலைத்துபிடிக்கப் பட்டுப்பிரியலாச்சுதே 5

கூட்டமூட்டமிழந்து பிரிந்து போறேனே
கூடியிருக்க இனிவராம லாச்சுதே 6

மலக்குமௌத்து என்னைத்தேடி பிடித்ததே
மறைத்துஒழிய தோதிலாம் லாச்சுதே 7

துக்கமேஎன் துக்கமேஎன் துக்கமே
துக்கமிகைத்து விட்டுபிரிய லாச்சுதே 8

இரவுபகலும் மங்களத்தோடிருந்தேனே
இனிவராமல் விட்டுப்பிரிய லாச்சுதே 9

எந்தன் மக்கள் மனிதரே என் தோழரே
இந்தப்பிரிச்ச விப்பவந்து வாச்சுதே 10

இந்தப்பிரிச்சலிப்ப ஏதென்றிருந்தேனே
இந்தவேளை பிரிந்துபோக லாச்சுதே 11

அழுவையே என்னமுழைகையே என்னமுழைகையே
அழுதமழுது பிரிவதேதா னுச்சுதே 12

என்னசெய்வோ மானதாக்க நேசரே
என்னைநீங்கள் சந்திப்பதென் றுச்சுதே 13

ஸபருசெய்யுங்க ளஸ்ஸலாமு அலைக்குமே
ஜல்தி எடுங்கள் வேளைமிருந்த மாச்சுதே 15

மையத்து தெருவிலானபின் ஓர் மலக்கு சொல்வது அதே இராகம்.

மையத்தெடுத்து கொண்டுவரையில் தெருவுக்கு
மலச்சிலொருவர் சொல்லுவாராவதற்கு 1

இன்றையோடு பிள்ளைபெண்டை விட்டியா
இன்றுகபுரைத் தேடிபயண மாச்சுதே 2

வீடுபொருளு சொந்தமெல்லா மொழிந்ததா
விரும்பு கபுரைத்தேடி போகலாச்சுதா 3

இந்தஸபரை போலஸபரு செய்தியா
இப்பகபுரின் ஸபருவந்து வாச்சுதா 4

போறவழியே திரும்பியொருநாள் வருவியா
போயிதிரும்பா பயணமுனக்கு மாச்சுதா 5

நல்லஅமலை செய்துவைதும் சேர்த்தியா
நினைத்துத்திரும்பா கபருப்பயண மாச்சுதா 6

றப்புநபியின் சொல்படிநீ நடந்தியா
நிரம்ப பயத்தின் வீட்டுஸபரு வாச்சுதா 7

பிறந்துவாழ்ந்து இறந்துஜல்தி போறயா
பெருத்தபயத்தின் தானம்போலாச்சுதா 8

கபருகஷ்டம் ஹஷருவருத்த மறிந்தியா
கபனையுடுத்தி கபுரைச்சேர லாச்சுதா 9

கபனைத்தவிர ஒன்றுமில்லை என்னையா
கபருவீட்டைத் தேடிபயண மாச்சுதா 10

யென்செய்வா யங்கேப்பாயி காவியா
எண்ணுமதுவே தரணமாக வாச்சுதா 11

அங்கேனகரு நல்வருக்கென் றறிந்தியா
இங்கேயதுவை யறியுமுன் சாகலாச்சுதா 12

தொழுக வைக்கையில் மையத்துக்கு ஒர்மலக்கு சொல்வது.

இன்றுஇங்கே வந்துநீயும் சேர்ந்தியா
எண்ணும்திரும்பே னென்றுஎண்ணம் கொண்டியா 1

ஆட்டம்பாட்ட மொடுங்கியிங்கே வந்தியா
ஆசைநாட்ட மிழந்துஉயிரைத் தந்தியா 2

கூட்டமூட்ட மக்களைநீ பிரிந்தியா
குடும்பத்தாசை விட்டுசுகமு மிழந்தியா 3

நன்றுஏதும் செய்துஇங்கெ வந்தியா
நொன்பலம்துட ராமலேதும் செய்தியா 4

கபனிலுன்னைச் சுட்டிதூக்க தந்தியா
கபரிலுதவ கையேதும் செய்தியா 5

கபருஹாலை கேட்டுமனதில் தெரிந்தியா
கபுரைதுனியாவில் நினைத்து தெரிந்தியா 6

மலக்குறாமான் முனக்கிர்ககன்கிரை யறிந்தியா
மலக்குமுன்கிர் ஹறானை தெரிந்துபயந்தியா 7

இன்றையோடு ஆனேநீ கபுறுனியா
யிங்கேயுந்தன் வீடுஆச்சு காலியா 8

கைருஏதும் செய்திடாமல் காலியா
கபரிலென்ன செய்வேநீ பாவியா 9

தீனிலுள்ளபடி நடந்துநீ இறந்தியா
திட்டமாக ஆவேநீ சொர்க்கவழியா 10

தீங்குசெய்து இறந்தையாகில் பாவியா
தீங்குதுன்பம் மிகுந்துபெறுவே ஞரியா 11

அடக்கையில் மையத்து சலாம்சொல்வது யாகோத்துபா இராகம்.

ஸலாமுன் அலைக்கும்என் குளிவரையில் வந்தவரே
ஸலாமுன் அலைக்கு கபுருள்ளென்னை தைத்தவரே 1

ஸலாமுன் அலைக்கும் சந்திப்பூதெப்போ என்கபுரே
ஸலாமுன் அலைக்கும் சொந்தபந்தும் சிநேகிதர்களே 2

தனியாக கபரினுள்ள தனித்தெந்த வகையிருப்பேன்
தனித்திருந்த யிருளினுள்ள தங்கமன ஒப்புகிறேன் 3

ஸலாமுன் அலைக்கும் கபரில் மூடிக்கொள்ளுகிறேன்
ஸலாமுன் அலைக்கும் சொந்தபந்தும் சிநேகிதர்களே 4

என்பேரு உங்களிடம் இன்றோடு மறையலாச்சு
இன்றோடு இந்தகபர் எனக்காக வீடாச்சு 5

ஸலாமுன் அலைக்கும் நானும்மண்ணோடு சேர்ந்தாச்சு
ஸலாமுன் அலைக்கும் என்கபுரை மூடிடுங்கள் 6

எனக்குண்டும்மக்களே நானின்றோடு உங்களிடம்
எத்திவிட்டுஇந்த கபரெனக்காக வீடுதினம் 7

என்றடக்க மானேன் எளியவர்க்கு கையிடுங்கள்
உன்பாவத்தைப் பொறுக்க ஏந்திடுங்கள் கையிகளே 8

மையத்தை மண்ணில் மறைத்தபின் கபருமண்ணால்
நிறையுமுன் மையத்தில் ரூஹுவின் நுழைவதும, ருமான்

மலக்கு வந்து கேழ்ப்பதும் மத்னவி இராகம்.

மலக்குமௌத்து கொண்டுபோன றாஹியின்
மடைக்கி கபிருக கனுப்பப்படுதும் கூர்த்துவீன் 1

மையத்துமண்ணில் மறைந்தபின்பு றாஹதான்
மையத்தோடு வந்துசேரு மரினீதல்பு றாஹதான் 2

மலக்குறாமானந்த உடனேவருகுவார்
மையத்தெழும்பி இருக்கவைத்து மொழியுவார் 3

நன்மை தின்மை செய்ததெல்லா மெழுதுகாண்
நேரமிகுதி யாக்கிடாதே ஜல்திகாண் 4

சொல்லுமந்த மையத்து கைஸேதமே
ஜல்தி எழுத இல்லைகடிதம் மையமே 5

என்னசெய்வே னில்லைதலமு மென்னிடம்
என்னசெய்வெனவருங் கொடுப்பாரிரவலும் 6

சொல்லுவா ரொன்றுகபனு துண்டேகடிதமே
வஸீஸ்திசெய்வ திந்தவேளை மோஸமே 7

கையின்கலுமாவிரலு தானென்றுகலமுகாண்
கைரெுஷ்ற்றோ செய்தைநீ ரெழுதுகாண் 8

வாயிலெச்சிமையி தக்ஷணத்தி லெழுதுகாண்
வம்புதுன்பை பெற்றிடாமல் பேணுகான் 9

அரண்டுமையத் தழுதுநடுங்கி துடிக்குமாம்
அழுதுகலிமா விரலைகலமாய்ப் பிடிக்குமாம் 10

வாயினெச்சி கொண்டுஎழுதும் கபனிலே
வாழ்ந்துசெய்த நன்மையெல்லா முழுவதே 11

எழுதிநன்மை தீர்ந்தபின்பு தின்மையே
எழுதறப்பை விளக்கித்தொழுதோ தாமலே 12

தூக்கிதடியை யடிக்கஓங்கி சொல்லுவார்
தின்மையெல்லா மெழுதிமுடிநீ அய்கிமார் 13

மாறுதுனியாவில் குதாக்கு செய்கையில்
மார்க்கமொழிந் தறப்பைவெழ்க்கித் தொதுங்கிடில் 14

இன்றுஏது இந்தவெழ்க்கம் தோஷிநீ
ஒன்றுவிடாமல் பாவத்தெல்லா மெழுதுநீ 15

பறிநடுங்கி பயந்துகொஞ்சி யழுகுமாம்
பகலுமிரவன் பாவமெல்லா மெழுதுமாம் 16

சொல்லுவாக மெழுதிதீர்ந்த பின்பதை
சுருட்டிமடக்கி முத்திரிசேய் நீஅதை 17

மொழியுமையத் தென்னசெய்வேன் தூதரே
மொஹருசெய்ய முத்தபிரீய மில்லையே 18

சொல்லுவாரா முந்தன்கையின் பெருவிரல்
சூழ்வுள்ளநகமே மோகர்நீ யறிந்தருள் 19

எழுதிமடித்து பெருவிரல் நகத்தாலாவது
எச்சிக்கொண்டு முடிக்கும் மோகரு செய்தது 20

வாங்கிகழுத்தில் மையத்திற்கு மாட்டியே
வழமைபோல மையத்தங்கே நீட்டியே 21

வந்தவழியே போகுவாரா மறியீதே
வணக்கம் மிருதம் செய்துசேரு வம்பதே 22

முன்கிருனக்கீர் மலக்குகள் வந்து கேழ்ப்பது
அதே இராகம்.

கபருமூடி தீர்ந்தபின்புதான் மலக்குகள்
கண்ணினீல வர்ணமுள்ள பேருகள் 1

மையத்தின் தலைமாட்டு சுவத்தைக் கிழித்தவர்
மொட்டகடுத்த பயந்தமுகத்தை யுடையவர் 2

இருபுரத்தில் மையத்தருகே நின்றவர்
இருதிசவத்தை கேள்விகேட்பா ரறிந்துணர் 3

நாலுமிவரு முன்கிருனக்கிருகாண்
நாங்களுண்டு மென்றறிந்திருப்பீர்காண் 4

உன்னைபடைத்து வளர்த்தறப்பு யாருகாண்
உனக்குறப்பு விதித்ததினு மேதுகாண் 5

உனக்குவந்த நபியுமாறு சொல்லுநீ
உனக்குசொர்க்கம் கிடைக்கசொல்லு வெல்லுநீ 6

நீகொடுத்தா விந்தமூன்று கேழ்விக்கும்
நீதமான மறுமொழிஎன் றென்றைக்கும் 7

சொந்தவீடு சொர்க்கமென்றே ஆவியே
சுகங்கொடுக்கப்பட்ட அப்போதாவியே 8
ஸஞ்சலங்க ளொன்றுமில்லை எங்குமே
சௌக்கியங்க ளென்னைச்சுற்றித் தங்குமே 9
நல்லவர்கள் கொடுக்குவார்கள் நல்ஜவாப்
நல்லசொர்க்க மடையுவார்கள் பிஸ்ஸவாப் 10
நரகவீட்டைத் திறந்துகாட்டி மூடுவார்
நல்ஜவாப்பைக் கொடுத்திடாதோர் வீடுபார் 11
என்றுசொல்லி சொர்க்கவாசல் திறந்தவர்
எண்ணுமடையும் சொர்க்கத்தை என்றவர் 12
சூஸ்திரத்தில் மறைந்துவிடுவா ரறிந்திடும்
சொர்க்கசுகங்க ளென்றுமிவரைத் தங்கிடும் 13
கெட்டவர்கள் பார்த்தவானை நடுங்குவார்
கேள்விக்கேதும் சொல்லிடாம லழுகுவார் 14
கத்தகத்த மெத்தகதற தோஷியை
குத்திமெத்த கொடுக்குவார்கள் பூவையை 15
இந்தவகையே மூன்றுதடவை செய்தவர்
இந்தமூன்று கேள்விகளையும் கேட்டவர் 16
என்னமோசம் செய்துவந்தாய் இங்கேநீ
இங்கைக்காக என்னதேடி வைத்தாய்நீ 17
என்றுசொல்லி சொர்க்கவாசல் திறக்குவார்
எழுந்துபார்க்க சொல்லிமூடிச் சொல்லுவார் 18
இன்றுமூன்று கேள்விக்கும் சொன்னஜவாப்
இருந்ததுனக்கு இந்தவீடு ஐகராப் 19
என்றுசொல்லி திறந்துநரக வாசலை
எரிந்துகருகு நினைத்துநித்த மாவலை 20
என்றுசொல்லி சூஸ்திரத்தில் மலக்குகள்
எழுந்துகபுரை விட்டுமறைவா ரறிந்துகொள் 21
உடனேநரக நெப்புதேளும் பாம்புகள்
உகந்துநிறைந்து கொள்ளுமந்த கபரினுள் 22
இன்னமெத்த வுண்டுஅட்டை சூளிகள்
எண்ணித்தீரா விஷபிராணி வந்[illegible]கள் 23
கூட்டங்கூட்டமாகவந்து சேருமே
கோடிலச்ச மிச்சைகள் செய்யுமே 24

மையத்துக்கு தான்செய்திருந்த அமலுகள் சொல்வது அதே இராகம்

சொல்லும்கபரில் மையத்தின் அஹம[illegible]
சூழ்ந்துகபரில் மையித்தை சிலசெய்திகள் 1
உன்சொத்தும் தோழரும் பிரிந்தார்களா
உதவியாரு முன்னுடன் இருந்தார்களா 2

4

113898

உன்னைத்தனியாய்ப் புதைத்துப்பிரிந்தா ரறியதே
உனக்குத்துணை என்றுரிருந்தா ரறியதே 3
இன்றுனக்கு எங்களொழிய துணைகளார்
இன்றுமென்று மெங்களாலே கூவிபார் 4
நீஹயாத்தில் செய்தநன்மை தின்மைகள்
நாங்களென்று அறிந்துகூடி இருந்துகொள் 5
நன்மைமிகுதம் செய்திருந்தா லின்றுநீ
நரகமொதுங்கி.சொர்க்கம்பெறுவா யின்றுநீ 6
தின்மைமிகுதம் செய்திருந்தா னின்றுநீ
தீங்கு துன்பமிகுதம் பெறுவேதோஷிநீ 7
மூமினாகிய மையத்துக்குக் கபரில் அல்லாஹுத்த ஆலா

தேருதல் சொல்வது அதே இராகம்.

ஸாலிகானமைத் தழுது கபரிலே
ஸலித்துசொல்லும் றப்பெனுடி கபரியே 1
ஸேதமேகை ஸேதமே தனியானேனே
சலுகைகேட்க யாரையும் காணேனே 2
றப்பனுநீ இந்தவேளை யுதவிசெய்
றகமத்தெந்தன் பேரிலிறங்கி கிருபைசெய் 3
இந்தநாளு வரையிலுந்தன் கிருபையில்
இருந்துதனிக்க லாச்சுதிந்த கபரனில் 4
அழுதவுடனே சப்தமாகும் நேசனே
அழுவவேண்டா மருமையா னென்னடியனே 5
உனக்குடனு முயிருமீமான் தந்தனே
உனக்குவாழ வயதுரிஸ்கை தருந்தனே 6
இன்னுமுனக்கு மட்டில்லா உதவிகள்
என்னைகொண்டே ஆயிருக்கும் கூர்ந்துகொள் 7
இன்னுமென்றும் மிகுதமுதவி செய்குவேன்
இன்பமான சொர்க்கசுகங்க வீய்குவேன் 8
உன்னைப்பெற்ற தந்தைதாயைக் காணவும்
என்னையுந்தன் பேரிலெழுவ தாயிரம் 9
கிருபையாள னென்றுஎண்ணென் னடியனே
யிரக்கமழுகை ஏனுனக்கென் நேசனே 10
அழுகைவேண்டா மீய்வனுனக்கு பில்ஜினன்
அழிவிலா சுகங்களெண்ணும் மிகுதினன் 11
ஹூருலீன்கள் உனக்குமிகுதம் தருகுவேன்
ஊழியர்க ளின்னம்பணிக்குக் கொடுக்குவேன் 12
அரஷைகுலுக்கு முந்தனழுகை ஸபருசெய்
அமரவைக்கும் நரகநெப்பைப் பொறுமைசெய் 13

சொர்க்கவாஸ லிந்தளடையில் கபரிலே
சுகத்தைக்கொடுக்க திறக்கப்படுகும் கொடியிலே 14

சொர்க்கசுகங்க ளெண்ணுமவரும் நேமமாய்
சொஸ்தமாகப் பெருகுவாரே சேமமாய் 15

நல்லஅமலை செய்தவர்க்கே வாசமே
நரகவீடு கெட்டவர்க்கே மோசமே 16

மக்ஷின் விபரம் அதே இராகம்.

நாளைமக்ஷர் ஹாலைஎன்ன சொல்லுகான்
நாமளெல்லா மிறந்துபோன பின்புகாண் 1

இன்னுமக்லூ காத்துமழிந்த பின்புகாண்
இன்னுமிரவு பகலுமொழிந்து போயிகாண் 2

ஹகதஆலா எழுப்புவா னெல்லோரையும்
ஹக்குனீதம் செலுத்தஎல்லார் பேரிலும் 3

பொழுதையாக்கி வல்லையத்தி னுயரத்தில்
பொறுக்கமுடியா வெயிலும்சூடும் செய்தல் 4

எரிக்கவைத்து மக்ஷராளி பேரிலே
எரைந்துகத்த வைக்குவான்மை தானிலே 5

வெய்யலினால் பூமிகொதிக்கும் கேளுகாண்
வெந்துகுமிழி போட்டுகூழை போலேகாண் 6

மக்கஷ்ருளி தலைவெடித்து மூளைகள்
முகத்துவழியே வடியுமப்போ தறிந்துகொள் 7

வெய்யலினால் வேர்த்தமுடலு முருகுமாம்
வெந்தமீன்போ லயிமுகங்கள் கருகுமாம 8

கத்திஅழுது அடிக்குவார்கள் தலைகளை
கதறியோட தேடுவார்கள் வழிகளை 9

அரஷிநெதரி லழைக்கப்படுவா ரனைவரும்
அரண்டுபயந்து வருகமாட்டா ரெவர்களும் 10

அந்தவுடனே நரகவடத்தை யனுப்பியே
அடுத்தடுத்து சுழன்றுவந்து நெருக்கியே 11

துரத்தியவரைச் சேர்க்கஅயஷி னெதிரிலே
துய்யசமத்தன் இட்டஏவல் கொடியிலே 12

இரக்கமற்ற கொடுமையுடனே சூழ்ந்திடும்
ஏவலெல்லா முடியசெய்தே தீர்ந்திடும் 13

நபிகளெல்லா முழுகுவார்கள் நப்ஸியா
நப்ஸிநப்ஸி யென்று மிகுதியா 14

மற்றவர்கள் பாடுதலையில் கைகளை
மெத்ததுடித்து முரித்துகையின் விரல்களை 15

விதியேவிதியேயின்று அழுவோரெத்தனை
விழுந்துபுரண்டு புலம்பியழுவோ ரெத்தனை 16

அய்யோஅய்யோ வென்பவர்க ளெத்தனை
அதறிகதறி புலம்புவார்க ளெத்தனை 17

வெய்யில்சூடு வதைக்குதௌபா ரெத்தனை
வயிறுவெடித்து குளப்பிகெடப்போ ரெத்தனை 18

கையைத்தலையில் வைத்துஅழுவோ ரெத்தனை
கையைக்கழுத்தில் மாட்டிஅழுவோ ரெத்தனை 19

காலுங்கையும் நடுங்கியழுவோ ரெத்தனை
கண்ணுமுழிகள் நட்டுவழுவோ ரெத்தனை 20

துடித்துபதைத்து கத்துவோர்க ளெத்தனை
துடித்துதுடித்து கதறியழுவோ ரெத்தனை 21

வயிறுமண்டை வெடித்தழுவோ ரெத்தனை
வெடித்துசதைக ளூனுவடிவோ ரெத்தனை 22

பெண்டுமிதியி லுருண்டுகிடப்போ ரெத்தனை
பொறுக்கமுடி யாமல்துடிப்போ ரெத்தனை 23

கேடேகேடே என்பவர்க ளெத்தனை
கேள்விக்கென்ன சொல்வனென்போ ரெத்தனை 24

யாரைப்பார்த்த போதுமழுகைப் பாடுதான்
யாருமழுகா பேரிராஜாயி தான் 25

பெண்டுபிள்ளை புருஷனுறவு மேதுகாண்
பிரியமுள்ள ஜனங்களுறவு மேதுகாண் 26

ஒருவர்க்கொருவர்க் கேதுபேச்சு கேளுகாண்
ஒருவர்க்கொருவர்க் குதவிடாத வேளைகாண் 27

ஏகமான கூக்குரல்க ளாகுமே
எங்கேபார்த்த போதுமழுகைச் சப்தமே 28

என்னசெய்வோ மிஷ்டரே கைசேதமே
இந்தநாளு வந்துவாச்சே தீருமே 29

சகலமுஸ்லி மானமக்ஷ ருளிகள்
சகலநபிக ளிடமொழிந் தழுவாருங்கள் 30

நப்புக்குகந்த பேர்களான நபிகளே
நப்புவேத மொழிசுமந்த பேர்களே 31

நீங்களல்லாவுக்குப் பிரியமானவர்
நீங்களவனை யடுத்துப்பேச வுகந்தவர் 32

எங்கள்பேரில்றப்பு கிருபைசெய்யவே
எண்ணுமீட்சிதக்த தானபநீங்கவே 33

கேட்டுகொடுங்கள் றப்பைகெஞ்சி நபிகளே
கேடுபொஷிக்கிகரிக்கி தீர்த்தசெதங்களே 34

சொல்லுவார்க ளிந்தவேளை ஙங்களால்
சொல்லிகேட்டுக் கொடுக்கமுடியா பெரியஹால் 35

எங்கள்ஹாலிலே நப்ஸிநப்ஸிநப்ஸியா
என்றுசொல்லி யழுகிறோமே மிகுதியா 36

போங்களிபுறூஹீ மடத்தில் ஜல்தியா
போயவரு மந்தப்படியே சொல்லுவார் 37

இன்னமிபுறூஹீமு சொல்வாறகமது
இன்னவிடத்தி லிருக்கிறூர்கள் திடமிது 38

போங்களவரு செய்யுவா ரீடேற்றங்கள்
போகுவார்கள் போட்டுபோட்டு கூக்குரல் 39

அகமதா முகம்மதா யாஸையதா
அம்ஜதா முமஜ்ஜத யாஸையதா 40

ஷாபிஹாமு ஷப்பிஹபா தல்கரம்
ஸாகிபுல்லாஹில் கபூரிதிற்கரம் 41

என்றுசொல்லி யிடத்தில் சேருவார்
ஏங்கியேங்கி அழுதுமுறைக ளிடுகுவார் 42

தங்கள்தங்கள் தங்கடங்கள் சொல்லுவார்
சப்தமிகுதம் போட்டுகெஞ்சி யழுகுவார் 43

இந்தஹாலை பார்த்துசைருல் அன்பியா
இங்கேவாங்க ளென்றுசொல்லி ஜல்தியா 44

சொல்லுவார்க ளும்மதத்தா என்னும்மத்தா
ஸபருசெய்யு மழுகவேண்டா மும்மத்தா 45

பார்த்துஉங்கள் ஹாலையென் ஈரல்நடுங்குதே
பதறிமனது திடித்துமிகுதம் அழுகுதே 46

என்றுசொல்லி போகுவார்கள் றப்பிடம்
ஏகமான துக்கத்தோடே ஹஸ்பிடம் 47

அர்றஹமாயா றஹீமாவென் றழுகுவார்
அரஷினடியில் செய்துஸஜ்கா மொழியுவார் 48

அரசைபடைத்த வல்லவாயா ஹஸ்பனு
ஹாதிருநரை செய்தவாயா றப்பனு 49

யாகபூனு யாகபூறு யாகபூர்
யாஜவாதா யாஜவாதா யாசுக்கூர் 50

மெஹ்ருசெய்து மக்ஷருனி பேருலே
மீட்சிகொடுத்து மோட்சமீய்நீ நேருலே 51

இன்னமவரு பாவமெல்லா மழித்துநீ
இரக்கமிகுதம் செய்துகிருபை செய்யிநீ 52

நீகபூரு நீகரீமு நீறஹீம்
நீஅஜ்ஜீஜு நீறஊபு நீஹலீம் 53

கிருபைசெய்தே தீரவேண்டும் றப்பனே
கொடுமைநீக்கி தயவுசெய்நீ ஹஸ்பனே 54

உதவிகாரு உதவிசெய்தா பீச்சியே
உன்னையன்றி யுதவியாரு மில்லையே 55

இவளவெல்லா மொழிந்துமுடியு முன்னமே
இறங்கிறகுமான் சொல்வதைநீர் கேளுமே 56

அழுகவேண்டா மழுகவேண்டா மைஹபீப்
அரஷுகுலுங்கி கவுந்துபோகு மைஅத்தீப் 57

சூடுநகரகமமுந்து போகுமைலத்தீப்
சுடருபோயி குளிந்துபோகு மைஷரீப் 58

தரையைவிட்டுன் தலையைத்தூக்கென் தோழனே
தவுலத்தெல்லா முனக்குசொந்தம் நேஷனே 59

படைத்தனில்லை யாகிலுன்னை நேஷனே
படைப்பதேது மற்றவஸ்தை நேயனே 60

உன்துவாவை வஸம்மதத்தி லாக்கினேன்
உன்மனம்போ லீயகஹரை நீக்கினேன் 61

தலையைதரையை விட்டுமெடுத்து ஷரபிஹு
தாங்கிகையை ஏந்திநிற்பார் நபிஹு 62

கஹ்றைநீக்கி மெஹ்ரவாளுக் கீய்தவன்
கண்யமிப்பான கோலுமீசான் நட்டவன் 63

தட்டிரண்டு தொங்குமதில் நேஸனே
திட்டமாக காணுவேநீ வாஸனே 64

நன்மைதின்மை ஒவ்வொருவர் செய்ததை
நன்மையொன்றில் தின்மையொன்றில் வைத்தகதை 65

நிறுத்துநன்மை கனத்தவர்க்குச் சொர்க்கமே
நிறுத்துதின்மை கனத்தவர்க்கு நரகமே 66

என்றுதீர்ப்பு செய்துநல்ல நீதவான்
ஏறிப்பாலம் போகசொல்லி விஜ்ஜினன் 67

பாலமொன்று நரகமுத்தி லாக்குவான்
பாவிநில்லோ ரனலருமே லேத்துவான் 68

கத்திமுனையைக் காணகூர்மை யானது
கத்திகரீகளுள்ள பாலமானது 69

காற்றுமிருளு மிருதமான தானமாம்
கடினமாக ஆடுகின்ற பாலமாம் 70

மட்டமெத்த மெறங்கதூரம் கேளுகாண்
மொத்தமூனு அல்புஸாலு பாருகாண் 71

பாவமிருந்தோ ரேதும்போது எடையிலே
பாலமறுந்து விழுகுவார்கள் நரகிலே 72

கத்திரீகள் கத்திரிக்கும் பாவியே
கத்திநரகில் விழுவார்கள் சாடியே 73

நல்லவர்கள் பாலமேறி சொர்க்கத்தை
நடந்துசேர்வா ரெடுத்துசிலர் ஆபத்தை 74

செலருமின்னல் போலேபோயி சேருவார்
செலருஜல்தி சொர்க்கம்போய் ஆழுவார் 75

இக்கரைமை தானிலேக வாகனம்
இருக்கமட்டும் சொர்க்கலோக சேகனம் 76

இவைகளோ மூர்க்கமான மிருகமாம்
எடுத்தும் வரைசுவர்க்கம் சேர்க்குமாம் 77

இவைகளவர்கள் கொடுத்த குருபானீயாம்
எதிலுமிருந்தா விறஷலாக போகுமாம் 78

நல்லவர்கள்சொர்க்க வாழியாகுவார்
ரகவாழிநகரம் போயிசேருவார் 79

மௌத்தையறுக்க படுகுமிருபே ரிடையிலே
முழு துமோதி விளங்குதுலங்கும் மனதிலே 80

மரணவிளக்கம் மனதைத்துலக்கும் முடித்தது
மிருந்தம்அனு பொருளுவிளக்கம் பொதிந்தது 81

முனாஜாத்து

சல்லியா ரப்பல் அனுமிலஸ்ஸமா
அலன்னபியில் முஸ்தபா முசல்லிமா 1

இல்முநாளே எங்கள்மனதை வெளிச்சமா
னுக்கிவொளிவா ஆக்குநாவைசுத்வமா 2

எந்தஹுரபும தவறிடாமல் நாவுலே
எணக்கமாக அக்ஷரத்தை ஒட்டிவை 3

சுத்தமா குர்ஆனை நாங்கள் ஓதநீ
சுத்தமாக்கி தந்தருள் நீநாவைநீ 4

இமாமுகஸ்ஸாலீ மனதைப்போலநீ
ஒளிவாகஆக்கு எங்கள்மனதை றப்புநீ 5

அபூசஹ்மா நாவுதொண்டை போலேநீ
அழகாக ஆக்குளங்கள் தொண்டைநாவைநீ 6
படிப்பைக்கெடுக்கும் ஆபத்தைநீ தட்டிவை
பிடித்தநோயை ஜல்தியாக நீக்கிவை 7
இன்ஸ்ஜின் ஸைத்தானு நாலேதுன்பங்கள்
எங்கள்பேரில் வந்திடாமல் காத்துக்கொள்
நோயிபஞ்சம் துக்கவந்தணுகாமலே
நாயனேநீ காருஎங்கள் யாபேர்கலே 9
எந்தநாளும் உன்னையாங்கள் வணங்கவே
உபகாரம்செய்யி விட்டிடாமல் காருமே 10
நாங்களிருக்கும் காலமெல்லா மிகுதமா
நல்லஇரணந் தவுலத்தைத்தா நேவமா 11
உனக்குப்போகுந்தா வேலையைஒர்காலமும்
எங்களாலே ஆயிடாமல் காத்திடும் 12
கடைசிபாவம் பொறுத்துஈமான் உடனேநீ
கொடுத்தருள்நீ எங்கள்பேரில் மெத்தைநீ 13
எங்கள்தாயி தகப்பரும் லாதாக்களும்
இன்னமெங்கள் தாதிமார் நானுக்களும் 14
கன்னிமார் சகோதரும் குலநேசரும்
நல்லமூமீன் முஸ்லிமான் பேர்களுக்கும் 15
இத்தாதிபேரும் ஜென்னத்துல் பிர்தௌசுக்குள்
எந்தநாளுமிருக்க நல்லுதவி செய்தருள்
சக்ருத்துதொடுத்து சொர்க்கம்புகுதமட்டினும்
பிக்ருத்துசகல மனும்பலத்தைக் கார்த்திடும் 17
இலாஹனுநீ ஆபியுனு காமீன்கடல்
இவாளுஎங்க பாவத்தையை அழிவதில் 18
யாரபானு யாஹஸ்பனுய யாதல்காம்
இந்தஹஸ்ஸாரை முழிக்த ஆஜிக்கும் 19
இன்னுமவரின் தாயிதாதி நானிக்கும்
அஹ்புபாபுபாபா நன்பாபா அஜ்தாதுக்கும் 20
அண்ணன் தங்கை அக்பரான பேருக்கும்
உஸ்தாதுக்கும் ஆமீனசொல்கின்றோருக்கும் 21
பாவம்பொறுத்து சொர்க்கம்கொடுத்துக் கிருபையால்
பாவிலீங்க லொடிருக்க செய்ஜலால் 22
சல்லியாரப்பல் அனமிவஸ்ஸமா
அலன்னபியில் முஸ்தபமுசலிமா 23

அமீனுமீன் யாரப்பல் ஆலமீன்

முனாஜாத்து முற்றுப்பெற்றது.

ஸ்ரீ மகள் விலாசம் பிரஸ், ஜி. டி. சென்னை.
Q. H. M. S. 347. காபி 1000. 20-6-46

வைத்திய புத்தகங்கள், புராண புத்தகங்கள்,
நாடக புத்தகங்கள், அம்மானை புத்தகங்கள்,
சாஸ்திர புத்தகங்கள், நாவல் புத்தகங்கள்,
இன்னும் அநேகவிதமான சில்லறை புத்த
கங்களும் எமது அச்சுயந்திரசாலையில்
கிடைக்கும்.

இட்டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,
சக்கரவர்த்தி பிரஸ்,
189, தங்கசாலை வீதி, சென்னை.